23.12.15

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணை நீர் திறப்பு அதிகரிப்பு

டெல்டா மாவட்டங்களில் மழை குறைந்ததையடுத்து, டெல்டா மாவட்ட பாசனத்திற்காக மேட்டூர் அணையின் நீர்திறப்பு, 500 கனஅடியிலிருந்து 7,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 600 கனஅடி நீரும் திறக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டிச.30இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டிச.30இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பது: விருதுநகர் ஆட்சியர் மன்ற கூட்டரங்கில் இந்த மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் டிச.30 காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. இதில், விவசாயம் தொடர்பான கோரிக்கை மனுக்களை வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

**உழவர் பாதுகாப்புத் திட்ட உதவிக்கு விண்ணப்பிக்கலாம்**

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நலத்திட்ட உதவிகள் பெற விவசாயி கள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி:

உழவர் பாதுகாப்பு அட்டை உள்ள அனைத்து விவசாயிகள், விவசாயம் சார்ந்த தொழில் செய்து வருவோர், அவர்களது வாரிசுகள் பயன்பெற லாம். இத்திட்டத்தில் கல்வி, திருமணம் ஆகியவற்றுக்கு உதவித் தொகை வழங்கப்படும். கல்வி உதவித் தொகையைப் பொருத்தவரை கல்வித் தகு திக்கு ஏற்ப ரூ.1250 முதல் ரூ.6,750 வரை வழங்கப்படும்.

திருமண உதவித்தொகையாக ஆண்களுக்கு ரூ.8 ஆயிரம், பெண்களுக்கு ரூ.10 ஆயிரம், விபத்து மரண நிவாரண உதவித் தொகையாக ரூ.1 லட்ச ம், விபத்தில் உடல் ஊனமுற்றால் ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். ஆகவே, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நலத்திட்ட உதவிக ளைப் பெற சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூகப் பாதுகா ப்புத் திட்ட வட்டாட்சியரை அணுகலாம் என்றார்.

**கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை உயர்வு**

பல்லடம் பிராய்லர் கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழு நாள்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.81 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரிப்பால் செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.83 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை:

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.99, சென்னையில் ரூ.4.25.

**டிசம்பர் 27-இல் பனை மர விதைகள் நடும் விழா**

சேவூர் அருகே தண்டுக்காரம்பாளையத்தில் டிசம்பர் 27-ஆம் தேதி பனை மர விதைகள் நடும் விழா நடைபெறவுள்ளது.

பனை மரம் அழிவின் விளிம்பில் உள்ளதால் அதுகுறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் சமூக ஆர்வலர்கள் சார்பில் இவ்விழா நடைபெறுகிறது. தண்டுக்காரம்பாளையம் குளக்கரை உள்ளிட்ட பகுதிகளில் பனை மர விதைகள் கடந்த வாரம் நடவு செய்யப்பட்டன. இந்நிலையில், தண்டுக்காரம்பாளையம் பள்ளி மைதானத்தில் பனை மர விதைகள் நடும் விழா டிசம்பர் 27-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், அப்பகுதியைச் சுற்றியுள்ள குளங்கள் உள்ளிட்டவற்றில் 12 ஆயிரம் பனை மர விதைகள், வில்வம், அரசு, இச்சி, வேம்பு ஆகிய மரக் கன்றுகளும் நடப்படவுள்ளன. இதில், இயற்கை வளம் குறித்து கருத்தரங்கு, விருந்து உபசரிப்பு ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் பங்கேற்குமாறு தண்டுக்காரம்பாளையத்தில் வீடு வீடாகச் சென்று வெற்றிலை பாக்கு, தேங்காய் பழம், பனை மர விதை உள்ளிட்ட தாம்பூலத் தட்டுடன் சமூக ஆர்வலர்கள் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தனர்.

**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 78.60 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 78.60 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,723 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 50 கன அடி நீரும், வாய்க்காலில் 1,900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 14.9 டி.எம்.சி.

**"மூலிகைப் பயன்பாடு நோய் வராமல் தடுக்கும்'**

நாமக்கல், டிச. 22: மூலிகைகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள முடியும் என மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம், எர்ணாபுரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவப் பிரிவின் சார்பில், சிறப்பு சித்த மருத்துவ முகாம், மூலிகைக் கண்காட்சி நல்லிபாளையம் சமுதாயக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்து, மூலிகைக் கண்காட்சியைத் திறந்து, சித்த மருத்துவ முகாமை தொடக்கி வைத்துப் பேசியது:

முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், தனியார் மருத்துவமனைகளில் 1,000-க்கும் மேற்பட்ட நோய்களுக்கு சிறந்த சிகிச்சை பெற ஆண்டுக்கு ரூ.ஒரு லட்சம் வீதம் அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு ரூ.4 லட்சம் வரை மருத்துவ சிகிச்சை பெறும் வாய்ப்பை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. கர்ப்பிணிகளின் நலன் கருதி 10 சித்த மருந்துகளை தமிழக அரசு இலவசமாக வழங்கி வருகிறது. மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களையும் கட்டுப்படுத்தும் தன்மை கொண்ட சித்த மருத்துவ மூலிகைகள் அதிகம் நமது பகுதிகளில் இருக்கின்றன. அவற்றைப் பொதுமக்கள் முழுமையாகத் தெரிந்து வைத்துக் கொண்டு பயன்படுத்த வேண்டும். இதுபோன்ற மூலிகைகளைத் தொடர்ந்து

பயன்படுத்தி வந்தால் நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றார். முன்னதாக, சித்த மருத்துவத் துறையின் சார்பில், அமைக்கப்பட்ட மூலிகைக் கண்காட்சியைத் திறந்து வைத்து பார்வையிட்ட ஆட்சியர் கர்ப்பிணிகள், பொதுமக்களுக்கு நெல்லிக்காய் சாறு, நில வேம்பு கஷாயத்தை வழங்கினார். பின்னர், முகாமில் பங்கேற்ற கர்ப்பிணிகளுக்கு 10 வகையான சித்த மருந்துகளையும் வழங்கினார். முகாமில், எர்ணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவ ஆலோசகர் செ.பூபதிராஜா வரவேற்றார். சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் ரா.ஜெமினி, நாமக்கல் நகர்மன்றத் தலைவர் ரா.கரிகாலன், நகராட்சி ஆணையர் எம்.செந்தில்முருகன், வட்டாட்சியர் கதிரேசன், எர்ணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் தொ.ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணையிலிருந்து இன்று தண்ணீர் திறப்பு**

காவிரி டெல்டா பாசனத்துக்காக புதன்கிழமை (டிச. 23) முதல் தண்ணீர் திறந்துவிடப்படுவதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்த பலத்த மழை காரணமாக மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீர், கடந்த நவம்பர் 5-ஆம் தேதி நிறுத்தப்பட்டது. அதையடுத்து, அன்று முதல் குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

தற்போது டெல்டா பாசனப் பகுதிகளில் மழை நின்றதால் நீரின் தேவை அதிகரித்துள்ளது. இதனால், புதன்கிழமை காலை முதல் மேட்டூர் அணையிலிருந்து நொடிக்கு 7 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படாததால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வந்தது. டிசம்பர்

இறுதிக்குள் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், புதன்கிழமை காலை முதல் தண்ணீர் திறப்பதால் மேட்டூர் அணை நீர் மட்டம் நடப்பாண்டில் 100 அடியை எட்டும் வாய்ப்பு நழுவி போனது.

**விவசாயிகளின் மேம்பாட்டுக்கு வேளாண் வணிகக் கூட்டமைப்பு : ஆட்சியர்**

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், வேளாண் நிறுவனம், வேளாண் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு சார்பில், விவசாயிகள், உற்பத்தியாளர் கழக நிறுவனர்கள், அதன் உறுப்பினர்கள் பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி பேசியது:

இன்றைய வேளாண்மையின் சவால்களை சிறு மற்றும் குறு விவசாயிகள் எதிர்கொள்ளவும், வேளாண்மைக்குத் தேவையான நிதி மற்றும் தொழில் நுட்பம், இடுபொருட்கள், நேரடி சந்தை வாய்ப்புகளுக்கு தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் உழவர் உற்பத்தியாளர் அமைப்பு என்ற புதிய அமைப்பை நாடுதழுவி உருவாக்குவதற்கு நிறுவனங்கள் சட்டத்தில் 2002-ம் ஆண்டு மத்திய அரசு ஒரு திருத்தத்தை கொண்டு வந்தது.

உழவர்களை அடிப்படை பங்குதாரர்களாகக் கொண்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்கி, அதன்மூலம் உற்பத்தியை பெருக்கவும், விளைபொருட்களின் தரத்தை உயர்த்தவும், உழவர் வாழ்வில் வளத்தைப் பேணவும், உழவர் உற்பத்தியாளர் அமைப்பு என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசு திட்டங்களில் உள்ள நிதியை பயன்படுத்த இந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை பொருளாதார வலிமையுடனும், ஜனநாயக நடைமுறையுடனும், சுயமாக நிர்வாகம்

செய்யும் வாய்ப்புடன் செயல்படவும் சிறு விவசாயிகளின் வேளாண் வணிக கூட்டமைப்பு முதன்மை முதல்வராக செயல்படுகிறது.

தமிழகத்தில் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக் கூட்டுதல் முறைகளை கடைப்பிடிக்கச் செய்வதன்மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உறுதிசெய்யப்பட்ட கொள்முதல் மற்றும் கூடுதல் விலையும் கிடைக்க அவர்களை ஈடுபடுத்தி செயல்படுவதே தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பின் நேர்க்கமாகும். இது வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமாகும். இந்த அமைப்பு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், பாரத ஸ்டேட் வங்கிகள், அதன் துணை அமைப்புகள், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய கூட்டுறவு மேம்பாட்டு மன்றம், மண்டல கிராமப்புற வங்கிகள் மற்றும் மாநில நிதி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே, இத்திட்டங்களை விவசாயிகள் நன்கு அறிந்துகொண்டு தங்களுடைய வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்றார். இந்த நிகழ்ச்சியில் வேளாண் மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மதனகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வயல்... வரப்பு... வாடிக்கையாளர்கள்!**

"வயலோடு நின்று விடாமல் உணவுப்பொருட்களாக வணிகம் செய்வதால் வெற்றிபெற முடிகிறது," என்கிறார், விருதுநகர், சூலக்கரை மேடு, சின்ன தாதம்பட்டியைச் சேர்ந்த விவசாயி சிவக்குமார்.

சிறுதானியங்களின் உணவுத்தன்மை குறித்து ஆய்வு செய்வதோடு, புதுப்புது உணவு மெனுக்களை உருவாக்கி வரும் சிவக்குமார், தன் அனுபவங்களை கூறியது: தாத்தா சங்கரலிங்கம் இயற்கை விவசாயம் செய்தார். அப்பா சுப்புராஜ் பொதுப்பணித்துறையில் வேலை பார்த்தார். தாத்தாவைப் போலவே எனக்கும் விவசாயத்தில் ஈடுபாடு இருந்தது. தாத்தா நிலம் என் கைக்கு வந்தபோது நெல் விவசாயம் செய்தேன். 22 ஏக்கரில் 2 ஏக்கர் ஆராய்ச்சிக்கு ஒதுக்கியுள்ளேன். 12 ஏக்கரில் குதிரை வாலி விதைத்தேன். இரண்டு ஏக்கரில் கொய்யா உள்ளது. உணவு உற்பத்தியில் நல்லதை கொடுக்க வேண்டும் என்பது நோக்கம். சத்து நிறைந்தது என்றாலும் விவசாயிகள் ஏன் குறுந்தானியங்களை கைவிட்டனர். இவற்றில் இருந்து கல், மண்ணை பிரித்து, சுத்தமான அரிசியாக்கும் தொழில்நுட்பம் குறைவு. கூழ், கஞ்சியாக மட்டுமே பார்த்து பழகிவிட்டோம். இரண்டு குறைகளையும் சரிசெய்தால் சிறு, குறுந்தானியங்கள் விவசாயிகளிடமும், மக்களிடமும் மறுபடியும் சென்று சேரும்.

குதிரைவாலி, தினை, வரகு விதைத்து அறுவடை செய்தேன். இவற்றை சுத்தம் செய்வதற்கான இயந்திரங்களையும் வாங்கினேன். இவற்றை படிப்படியாக தோல் நீக்கினால் தானியத்தை ஒட்டியுள்ள மேல்தோல் மட்டும் அப்படியே இருக்கும். அதனால் இந்த அரிசி சற்றே பழுப்பு நிறத்தில் இருக்கும். கடைகளில் விற்பதை போல பாலீஷ் செய்தால் சத்துக்கள் போய்விடும். சத்தான அரிசியை கிலோ ரூ.50 முதல் விற்பனை செய்கிறேன்.

உணவாக விற்பனை: கேழ்வரகு, தினை, குதிரைவாலியில் அல்வா செய்து விற்பனை செய்தேன். சென்னை சட்டசபை வரை இந்த உணவுகள் பிரபலமானது. கம்பு தானியத்தை கேரளாவில் கொடுத்து அவல் ஆக மாற்றினேன். அடுத்து கம்பு அவல் மிக்ஸர் செய்தேன். ஆர்டர் கேட்பவர்களுக்கு சாமை வெஜ் பிரியாணி, வரகு புளியோதரை, பனிவரகு

எலுமிச்சை சாதம், தினை தேங்காய் சாதம், குதிரைவாலி தயிர் சாதம் செய்து தந்தேன். காளான் உற்பத்தி செய்து காளான் இட்லி, காளான் முறுக்கு தயாரித்தேன். வயலோடு வேலை முடிந்ததென நினைத்தால், என்னால் லாபம் ஈட்ட முடியாது. வியாபாரிகள் கேட்கும் குறைந்தபட்ச விலைக்கு தானியங்களை கொடுக்க நேரிடும். உணவு, தின்பண்டங்கள் செய்வதோடு, மற்றவர்களுக்கும் பயிற்சி அளிக்கிறேன். அடுத்ததாக சிறுதானிய புழுங்கல் அரிசி தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன், என்றார். இவரிடம் பேச 98421 42049.

**-எம்.எம். ஜெயலட்சுமி, மதுரை**

## பஞ்சகவ்யா தயாரிப்பது எப்படி?

இன்று தமிழ்நாட்டு திட்ட கமிஷன் துணைத் தலைவர் திருமதி.சாந்தஷீலா நாயர் முதல், த.நா.விவசாய பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் ராமசாமி வரை மட்டுமல்ல, ஸ்பிக் போன்ற இரசாயன உரத் தயாரிப்பாளர்கள் கூட இயற்கை வழி விவசாயம் பற்றி பேசத் தொடங்கி விட்டனர். ஸ்பிக் நிறுவனம் 3 வகை இயற்கை உரங்களை விற்பனைக்கு அனுப்பத் தொடங்கி விட்டது. இந்நிலையில் “பஞ்சகவ்யா” பற்றி எங்கும் பரபரப்பாக பேசுகின்றனர். பஞ்சகவ்யா என்றால் என்ன? டாக்டர் கோ.நம்மாழ்வார் தினம் தினம் பேசினாரே இந்த பஞ்சககவ்யா பற்றி அறிவோம். இதை தயாரிக்க மாட்டுச் சாணம் 3 கி, மாட்டு சிறுநீர் (கோமியம்) 3லி, பால் 2லி, தயிர் 2லி, நாட்டு சர்க்கரை 1கி, (கரும்புசாறு2லி கூட பயன்படுத்தலாம்) வாழைப்பழம்12, இளநீர் 2லி, ஈஸ்ட்100கி, கடலை பிண்ணாக்கு1கி. பிண்ணாக்கை ஊற வைத்து அனைத்து பொருட்களையும் மண் பானை / வாளியில் கலந்து, துணியால் மூடி நிழலில் வைக்க வேண்டும். தினம் கலக்கி விட்டால் நுண்ணுயிர்கள் பெருகும். இதன் மூலம் 30 லி பஞ்சகவ்யா கிடைக்கும். 10 லிட்டர் நீரில் 300 மில்லி கலந்து தெளிக்கலாம். பயிர்கள் சிறப்பாக வளரும்.

6 மாதம் வரை இதை பயன்படுத்தலாம். 1 ஏக்கருக்கு 30 லி பஞ்சகவ்யாவுடன் 200 லி அமுதக் கரைசல் பாசன நீருடன் கலந்து விடலாம். இதை பயன்படுத்த மண் வளம் கூடும். பூக்கள் அதிகமாகும். அதிக லாபம் கிடைக்கும். www.vanagam.com, www.tnau.ac.in பாருங்கள்.

**-எம்.ஞானசேகர், விவசாய ஆலோசகர், 93807 55629**

**சின்ன சின்ன செய்திகள்**

**கால்நடைகளின் குடற்புழு தாக்கம்:**கால்நடைகளை பல்வேறு வகை குடற்புழுக்கள் தாக்குகின்றன. முக்கியமாக அவை மூன்று வகைப் படும். 1. தட்டைப்புழுக்கள் 2.உருண்டை புழுக்கள் மற்றும் 3.நாடாப்புழுக்கள். நோயின் அறிகுறிகள்: உணவு உட்கொள்ளாமை, கால்நடைகளின் தோல் பராமரிப்பு குறைந்து சொர சொரப்பாகக் காணப்படும். சில நேரங்களில் நீண்ட முடி முளைத்திருக்கும். துர்நாற்றத்துடன் பேதி, அதிக வயிற்றுப் போக்கின் காரணமாக கால்நடைகளின் உடலில் நீரின் அளவு குறைந்து தோல்கள் தடிப்புடன் உலர்ந்து காணப்படும். இரத்த சோகை: குடற்புழுக்கள் குடலின் பல பகுதியில் ஒட்டிக் கொண்டு தன் வளர்ச்சிக்காக இரத்தத்தை உறிஞ்சிக் கொள்கிறது. முகத்தில் அல்லது கழுத்தில் வீக்கம் காணப்படும். விளைவுகள் : மாடுகள் உடல் எடை குறைந்து பலவீனம் அடைகிறது. பால் மற்றும் இறைச்சி உற்பத்தியில் அளவு குறைகிறது. மாடுகள் இறக்க நேரிடுகிறது. தடுப்பு முறைகள் : சாணத்தை முறையாக அவ்வப்போது கொட்டகையிலிருந்து நீக்க வேண்டும். ஈரமற்ற இடத்தில் கால்நடைகளை வளர்க்க வேண்டும். வற்றிய குளங்களில் சிறிது நீர் உள்ள போது குளத்தினுள் மாடுகள் மேய்ப்பதைத் தடுக்க வேண்டும். குடற்புழு தாக்குதல், குடற்புழு நீக்க மருந்துகளை அனைத்து

மாடுகளுக்கும் கொடுக்க வேண்டும். தீவன மற்றும் தண்ணீர் தொட்டிகள் தூய்மை செய்ய வேண்டும். தகவல்: முனைவர் ஜெ.திரவியம், வேளாண் அறிவியல் நிலையம், புழுதேரி, ஆர்.டி.மலை, முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், குளித்தலை, கரூர் - 621 313.

**சிறுதானியங்களின் சிறப்பு:** இவற்றில் உள்ள நார்சத்து மற்றும் உயிர்ச் சத்துக்கள் இன்றி காணப்படும் பல நோய்களைத் தடுப்பதுடன் ஆரோக்கிய வாழ்விற்கும் உதவுகிறது. சிறுதானியங்களை உபயோகித்து தயாரிக்கக் கூடிய உடனடி உணவு வகைகளை மால்ட், அவல் மற்றும் சிற்றுண்டிகளை செய்து தொழில் ரீதியாக வருமானத்தைப் பெருக்கலாம். இந்த நவீன பரபரப்பான உலகில் மக்கள் அனைவரும் சிற்றுண்டி வகைகளையே விரும்பி உண்கிறார்கள். அதனை சிறுதானியங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் சிற்றுண்டி வகைகள் அனைத்தும் குறைந்த செலவில் நிறைந்த சத்து உள்ளதாகவும், சுவைமிக்கதாகவும் இருக்கும். இவ்வகை சிறுதானிய உணவுகளை மக்கள் விரும்பி உட்கொள்வதன் மூலம் சிறுதானிய உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. சிறு தானியங்களைப் பதப்படுத்தி அவல், பொரி, நூடுல்ஸ், சிறு குழந்தைகளுக்கான அடுமனைப் பொருட்கள் போன்ற உணவு பொருட்கள் தயாரிக்கலாம். மேலும் நம் பாரம்பரிய உணவுகளான போலி, அப்பம், அதிரசம் போன்ற உணவு வகைகளும் தயாரிக்கலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு முகவரி : முதல்வர், மனையியல் கல்லுரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், விவசாயக் கல்லூரி வளாகம், மதுரை - 625 104.

**பனிவரகு சர்க்கரை பொங்கல்:** தேவையான பொருட்கள்: பனிவரகு 1 கப், பாசிப்பருப்பு 1/4 கப், வெல்லம்3/4 கப், ஏலப்பொடி1/4 தேக்கரண்டி, நெய் 2 மேசைக்கரண்டி, நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை தேவைக்கேற்ப.

செய்முறை: பாசிப்பருப்பை வெறும் வாணலியில் வாசனைவரும் வரை வறுத்துக் கொள்ளவும். சுத்தம் செய்த பனிவரகு, பாசிப்பருப்பு,

தேவையான நீர் சேர்த்து வேக விடவும். வெல்லத்தைக் கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். வெந்த பனிவரகு பாசிப்பருப்பு கலவையில் வெல்லம் சேர்த்துக் கிளறி கொதிக்க விடவும். ஏலப்பொடி, நெய்யில் வறுத்த முந்திரி திராட்சை சேர்க்கவும். நெய் சேர்த்துக் கிளறி பரிமாறவும். தகவல் : கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், சென்னை - 600 041.

**மானாவாரியில் மண் மற்றும் ஈரப்பதம் காக்கும் தொழில்நுட்பங்கள்:** கோடை உழவு, ஆழச்சார் அகலப் பாத்தி மற்றும் பயிர்கழிவு மேலாண்மை. கோடை உழவு கோடை மழைக்கு முன் (அ) முதல் மழையிலிருந்து பயன்படுத்தி மண்ணை புரட்டி விடும். சட்டி (அ) மோல்டு போர்டு கலப்பை பயன்படுத்துதல். ஆழச்சார் அகலப்பாத்தி மானாவாரி கரிசல் நிலத்திற்கு ஏற்றது. நீர் தேங்குவதை தடுத்து எளிதில் நீர் வடிய உதவுகிறது. பயிர்க் கழிவுகளை தட்டை, வைக்கோல் போன்றவைகளை அதே நில மறுசுழற்சி செய்வதால் உரச்சத்தின் பயன் பாட்டுத்திறன் அதிகரிக்கிறது. **-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**சின்ன சின்ன செய்திகள்**



**கால்நடைகளின் குடற்புழு தாக்கம்:** கால்நடைகளை பல்வேறு வகை குடற்புழுக்கள் தாக்குகின்றன. முக்கியமாக அவை மூன்று வகைப் படும். 1. தட்டைப்புழுக்கள் 2.உருண்டை புழுக்கள் மற்றும் 3.நாடாப்புழுக்கள்.

நோயின் அறிகுறிகள்: உணவு உட்கொள்ளாமை, கால்நடைகளின் தோல் பராமரிப்பு குறைந்து சொர சொரப்பாகக் காணப்படும். சில நேரங்களில் நீண்ட முடி முளைத்திருக்கும். துர்நாற்றத்துடன் பேதி, அதிக வயிற்றுப் போக்கின் காரணமாக கால்நடைகளின் உடலில் நீரின் அளவு குறைந்து தோல்கள் தடிப்புடன் உலர்ந்து காணப்படும். இரத்த சோகை: குடற்புழுக்கள் குடலின் பல பகுதியில் ஒட்டிக் கொண்டு தன் வளர்ச்சிக்காக இரத்தத்தை உறிஞ்சிக் கொள்கிறது. முகத்தில் அல்லது கழுத்தில் வீக்கம் காணப்படும். விளைவுகள் : மாடுகள் உடல் எடை குறைந்து பலவீனம் அடைகிறது. பால் மற்றும் இறைச்சி உற்பத்தியில் அளவு குறைகிறது. மாடுகள் இறக்க நேரிடுகிறது. தடுப்பு முறைகள் : சாணத்தை முறையாக அவ்வப்போது கொட்டகையிலிருந்து நீக்க வேண்டும். ஈரமற்ற இடத்தில் கால்நடைகளை வளர்க்க வேண்டும். வற்றிய குளங்களில் சிறிது நீர் உள்ள போது குளத்தினுள் மாடுகள் மேய்ப்பதைத் தடுக்க வேண்டும். குடற்புழு தாக்குதல், குடற்புழு நீக்க மருந்துகளை அனைத்து மாடுகளுக்கும் கொடுக்க வேண்டும். தீவன மற்றும் தண்ணீர் தொட்டிகள் தூய்மை செய்ய வேண்டும். தகவல்: முனைவர் ஜெ.திரவியம், வேளாண் அறிவியல் நிலையம், புழுதேரி, ஆர்.டி.மலை, முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், குளித்தலை, கரூர் - 621 313.

**சிறுதானியங்களின் சிறப்பு:** இவற்றில் உள்ள நார்சத்து மற்றும் உயிர்ச் சத்துக்கள் இன்றி காணப்படும் பல நோய்களைத் தடுப்பதுடன் ஆரோக்கிய வாழ்விற்கும் உதவுகிறது. சிறுதானியங்களை உபயோகித்து தயாரிக்கக் கூடிய உடனடி உணவு வகைகளை மால்ட், அவல் மற்றும் சிற்றுண்டிகளை செய்து தொழில் ரீதியாக வருமானத்தைப் பெருக்கலாம். இந்த நவீன பரபரப்பான உலகில் மக்கள் அனைவரும் சிற்றுண்டி வகைகளையே விரும்பி உண்கிறார்கள். அதனை சிறுதானியங்களைப் பயன்படுத்தி செய்யப்படும் சிற்றுண்டி வகைகள் அனைத்தும் குறைந்த

செலவில் நிறைந்த சத்து உள்ளதாகவும், சுவைமிக்கதாகவும் இருக்கும். இவ்வகை சிறுதானிய உணவுகளை மக்கள் விரும்பி உட்கொள்வதன் மூலம் சிறுதானிய உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. சிறு தானியங்களைப் பதப்படுத்தி அவல், பொரி, நூடுல்ஸ், சிறு குழந்தைகளுக்கான அடுமனைப் பொருட்கள் போன்ற உணவு பொருட்கள் தயாரிக்கலாம். மேலும் நம் பாரம்பரிய உணவுகளான போலி, அப்பம், அதிரசம் போன்ற உணவு வகைகளும் தயாரிக்கலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு முகவரி : முதல்வர், மனையியல் கல்லுரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், விவசாயக் கல்லூரி வளாகம், மதுரை - 625 104.

**பனிவரகு சர்க்கரை பொங்கல்:** தேவையான பொருட்கள்: பனிவரகு 1 கப், பாசிப்பருப்பு 1/4 கப், வெல்லம்3/4 கப், ஏலப்பொடி1/4 தேக்கரண்டி, நெய் 2 மேசைக்கரண்டி, நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை தேவைக்கேற்ப.

செய்முறை: பாசிப்பருப்பை வெறும் வாணலியில் வாசனைவரும் வரை வறுத்துக் கொள்ளவும். சுத்தம் செய்த பனிவரகு, பாசிப்பருப்பு, தேவையான நீர் சேர்த்து வேக விடவும். வெல்லத்தைக் கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். வெந்த பனிவரகு பாசிப்பருப்பு கலவையில் வெல்லம் சேர்த்துக் கிளறி கொதிக்க விடவும். ஏலப்பொடி, நெய்யில் வறுத்த முந்திரி திராட்சை சேர்க்கவும். நெய் சேர்த்துக் கிளறி பரிமாறவும். தகவல் : கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், சென்னை - 600 041.

**மானாவாரியில் மண் மற்றும் ஈரப்பதம் காக்கும் தொழில்நுட்பங்கள்:** கோடை உழவு, ஆழச்சார் அகலப் பாத்தி மற்றும் பயிர்கழிவு மேலாண்மை. கோடை உழவு கோடை மழைக்கு முன் (அ) முதல் மழையிலிருந்து பயன்படுத்தி மண்ணை புரட்டி விடும். சட்டி (அ)

மோல்டு போர்டு கலப்பை பயன்படுத்துதல். ஆழச்சார் அகலப்பாத்தி மானாவாரி கரிசல் நிலத்திற்கு ஏற்றது. நீர் தேங்குவதை தடுத்து எளிதில் நீர் வடிய உதவுகிறது. பயிர்க் கழிவுகளை தட்டை, வைக்கோல் போன்றவைகளை அதே நில மறுசுழற்சி செய்வதால் உரச்சத்தின் பயன் பாட்டுத்திறன் அதிகரிக்கிறது. **-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## இயற்கை உணவுப் பொருள் கண்காட்சி

நிலக்கோட்டை :நிலக்கோட்டை குமரப்பசெட்டியார் நினைவு மெட்ரிக்.,பள்ளியில் இயற்கை உணவுப் பொருள் கண்காட்சி நடந்தது. பிரி கே.ஜி., மாணவர்கள் பால், தயிர், மோர், பால்கோவா உள்ளிட்ட 30 வகையான பால்சார்ந்தவை, எல்.கே.ஜி., மாணவர்கள் கொய்யா, மாதுளை, அன்னாச்சி உள்ளிட்ட பழ வகை, யு.கே.ஜி., மாணவர்கள் வெண்டை, சுரை, அவரை ஆகிய காய் வகைகளை கண்காட்சியில் இடம் பெறச் செய்தனர். தாளாளர் திருநாவுக்கரசு கண்காட்சியை துவக்கி வைத்தார். நிர்வாக இயக்குநர் அண்ணாமலை முன்னிலை வகித்தார். முதல்வர் ஜெய்சங்கர் இயற்கை உணவுப் பொருட்களின் பயன்கள் குறித்து விளக்கினார். ஆசிரியர்கள், மாணவர்கள் கண்காட்சியை பார்வையிட்டனர்.

## கோகோ சாகுபடியில் புதிய தொழில்நுட்பம் தேவை

தாண்டிக்குடி:திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி அருகே உள்ள கும்பறையூர், பூலத்தூர் பகுதியில் ஏராளமான ஏக்கர் பரப்பில் கோ கோ சாகுபடி செய்யப்படுகிறது. நடவு செய்த ஐந்தாவது ஆண்டில் காய்க்க தொடங்கி 20 ஆண்டுகள் வரை பலனளிக்கும். இதில் கிரியாலியோ, பாரஸ்டோ இரு ரகங்கள் உள்ளன. மரத்திற்கு சராசரியாக மூன்று கிலோ விதைகள் கிடைக்கும். ஆண்டில் ஒன்பது மாதங்கள் காய்கள் பறிக்கலாம்.

நோய் தாக்குதலாக சாம்பல் , வாடல், கருகல் நோய் பாதிப்புகளால் மரங்கள் பாதிக்கின்றன. காபிக்கு மத்தியில் ஊடுபயிராகவும், தனிப்பயிராவும் பயிரிடலாம். விவசாயி பத்மநாதன் கூறுகையில்:, பறித்த காய்கள் 5 நாள் வைத்து பின் விதைகள் எடுத்து நொதிக்க வைத்து பின் விதைகள் 5 நாள் உலர வைத்து பக்குவப்படுத்திய பின் விற்பனைக்கு செல்கிறது. கார்பரிஸ் நிறுவனம் விவசாயிகளிடம் கிலோ ரூ. 200 க்கு வாங்கி செல்கின்றனர். நோய் தாக்குதல் மற்றும் புதிய ரகங்கள், பயிரிடுவதில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தினால் இவ்விவசாயம் சிறப்பாக செய்ய ஏதுவாக இருக்கும்.

**பருத்தியில் சாறு உறிஞ்சும் "வெள்ளை ஈ'யால் பாதிப்பு**

திண்டுக்கல்: மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பரமசிவன் மற்றும் அறிவுடைநம்பி கூறியதாவது: பருவமழை முடியும் நிலையில் உள்ளதால் பருத்திப் பயிரில் வெள்ளை ஈ, இலைப்பேன், இலைத்தத்துப்பூச்சி, அசுவினி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதை தடுக்க பருத்தியின் அருகில் உள்ள துத்தி, செம்பருத்தி போன்ற களைச் செடிகளை அகற்ற வேண்டும். சுழற்சி முறையில் ராகி, மக்காச்சோளம், சோளம் போன்றவற்றை பருத்தியுடன் பயிரிடலாம். மஞ்சள் தண்ணீர் கிண்ணப்பொறி மற்றும் மஞ்சள் ஒட்டுப்பொறி மூலம் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம். வெள்ளை ஈ தாக்கிய இலைகளை சேகரித்து அழிக்க வேண்டும். மேலும் ஒரு எக்டேருக்கு, அசாடிராக்டீன் 0.15 சதவீதம் 500 முதல் 1000 மி.லி அளவு தெளிக்க வேண்டும். தயோகுளோபிரிட் 21.7 எஸ்சி ஒரு டேங்கிற்கு 3 மி.லி அளவிலும் அல்லது வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவீதம் அல்லது நொச்சி இலைச்சாறு 5 சதவீதம் தெளிக்கலாம். இலைப்பேன் தாக்குதலை பொறுத்தவரை, ஒரு கிலோ பருத்தி விதைக்கு 7 கிராம் இமிடோகுளோபிரிட் என்ற அளவில் விதை நேர்த்தி

செய்திருந்தால் இலைப்பேன், இலைத்தத்துப்பூச்சி அசுவினி ஆகிய பூச்சிகளிடமிருந்து பருத்திப் பயிரினை முதல் எட்டு வாரங்களுக்கு பாதுகாக்கலாம். ஒரு லிட்டர் நீருக்கு டைமிதோயேட் 2 மி.லி., அல்லது புரோபினோபாஸ் 2 மி.லி அளவில் தெளிக்கலாம் என்றனர்.

**வேளாண் துறை ஆலோசனை கூட்டம்**

கரூர்: கரூர் கலெக்டர் அலுவலகத்தில், வேளாண் துறை சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில், கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்து பேசியதாவது: தமிழகத்தில், விவசாய துறையில் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். இதன்மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உறுதி செய்யப்பட்ட கொள்முதல் மற்றும் கூடுதல் விலையும் கிடைக்கும். இதுவே, தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பு அமைபின் நோக்கமாகும். இது, வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறையில் பதிவு செய்யப்பட்ட சங்கமாகும். இதன்மூலம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், அதன் துணை அமைப்புகள் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய கூட்டுறவு மேம்பாட்டு மன்றம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குனர் ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் மதனகோபால், உட்பட பலர் பங்கேற்றனர்.

**செவ்விளநீர் தென்னைகன்றுகள் நடவு அதிகரிப்பு**

பெரியகுளம்,:பெரியகுளம் பகுதிகளில் குறுகிய கால செவ்விளநீர் தென்னங்கன்றுகள் அதிகளவில் நடவு செய்யப்படுகிறது.பெரியகுளம் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை மரங்கள் உள்ளன.

தென்னங்கன்றுகள் நடவு செய்யப்பட்ட 5 முதல் 7 ஆண்டுகளுக்குள் இளநீர் மற்றும் தேங்காய் விளைச்சல் தரும். 45 நாட்களுக்கு ஒரு முறை காய்கள் வெட்டப்படுகிறது. ஒருமரத்தின் வாழ்நாள் 70 ஆண்டுகளாகும். தற்போது பெரியகுளம் பகுதியில் குறுகிய காலத்தில் பலன்தரும் செவ்விளநீர் தென்னங்கன்றுகள் நடுவது அதிகரித்துள்ளது. இவை நடவு செய்யப்பட்ட 3 ஆண்டுகளில் பலன் கொடுத்து விடும். இவ்வகை தென்னை மரங்களில் 45 நாட்களுக்கு ஒருமுறை இளநீர் வெட்டப்படுகிறது. மரத்தின் வாழ்நாள் 35 ஆண்டுகளாகும். இந்தவகையான மரங்களில் இளநீர் மட்டும் கிடைக்கும். இளநீர் ஒன்று 20 முதல் 25 ரூபாய் வரை விற்கப்படுவதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. குறைந்த ஏக்கர் நிலப்பரப்பு உள்ளவர்கள் கூட அதிகளவில் செவ்விளநீர் தென்னங்கன்றுகளை வளர்ப்பதில் ஆர்வமாக உள்ளனர்.

**46 நாட்களுக்கு பின் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு 7,000 கனஅடி நீர்திறப்பு**

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, 46 நாட்களுக்கு பின், இன்று காலை, டெல்டா பாசனத்துக்கு, 7,000 கனஅடி நீர்திறக்கப்படுகிறது. மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த ஆக.,25ல், 60.5 அடியாகவும், நீர் இருப்பு, 25 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. பின்னர் காவிரி நீர்பிடிப்பு பகுதியில், வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரித்தது. நேற்று அணை நீர்மட்டம், 97.4 அடியாகவும், நீர் இருப்பு, 61.6 டி.எம்.சி.,யாகவும் உயர்ந்தது. கடந்த, 57 நாளில் அணை நீர்மட்டம், 37.5 அடியும், நீர்இருப்பு, 36.5 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவே நடப்பாண்டின் அதிகபட்ச நீர்மட்டமாகும். டெல்டா மாவட்டங்களில், வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், மேட்டூர் அணையிலிருந்து, சம்பா சாகுபடிக்கான நீர்திறப்பு கடந்த,

நவ.,5ம் தேதி நிறுத்தப்பட்டது. அணையில் இருந்து வினாடிக்கு, 500 கனஅடி நீர் மட்டுமே காவிரியாற்றில் வெளியேற்றப்பட்டது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் பருவமழை தீவிரம் குறைந்ததால் மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்கு இன்று காலை, 6 மணி முதல், வினாடிக்கு, 7,000 கனஅடி நீர்திறக்கப்படுகிறது. பாசனத்துக்கு நீர்திறப்பதால், அணை, சுரங்க மின் நிலையங்களில், 70 மெகாவாட், ஏழு கதவணை மின் நிலையங்களில், தலா, 10 முதல், 12 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படும். மேட்டூர் அணையில், 46 நாட்களுக்கு பின், பாசனத்துக்கு நீர்திறப்பதால், நீர்மின் நிலையங்களில், மின் உற்பத்திக்காக ஆயத்த பணி துவங்கியுள்ளது.

**குண்டு மல்லி சாகுபடி: விவசாயிகள் ஆர்வம்**

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஊடுபயிராக குண்டு மல்லி சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்செலுத்தி வருகின்றனர். ஆர்.எஸ்.மங்கலம் அருகே செங்குடி, சீனாங்குடி, சேத்திடல், வரவணி, புல்லமடை உள்ளிட்ட பகுதிகளில் நெல்லுக்கு அடுத்தபடியாக தோட்ட கலை பயிர்கள் அதிகம் சாகுபடி செய்யப் படுகிறது. இப்பகுதிகளில் தற்போது மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இத்துடன் தனி பாத்திகள் அமைத்து ஊடுபயிராக பதியம் வைத்த குண்டு மல்லி செடிகளை விவசாயிகள் சாகுபடி செய்துவருகின்றனர். விவசாயி மாணிக்கம் கூறுகையில்,""இந்த ஆண்டு பருவமழை தொடந்து பெய்ததால் விவசாய நிலங்கள் ஈரப்பத்துடன் பயிர்சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. மிளகாய் பயிருடன் ஊடுபயிராக குண்டு மல்லி சொகுபடி செய்துள்ளோம். இவை நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது,'' என்றார்.

**காளான் வளர்ப்பு இலவச பயிற்சி**

ராமநாதபுரம்: தோட்டக்கலை, ஊரகவளர்ச்சி, மகளிர் மேம்பாடு ஆகிய துறைகள் சார்பில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி ராமநாதபுரத்தில் நடந்தது. மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் ஜெயராமன் தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ்வேந்தன் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் அம்பேத்குமார், பயிற்சியாளர் தனபால் பேசினர். வேளாண் உதவி தொழில்நுட்ப மேலாளர் ஏகாம்பரம் நன்றி கூறினார். ஐம்பது விவசாயிகள் பங்கேற்றனர். தேசிய வேலையுறுதி திட்டத்தில் 40 அடி நீளம், 10 அடி அகலம் உள்ள பால் காளான் கூடம் மற்றும் 30 அடி நீளம், 16 அடி அகலம் உள்ள சிப்பி காளான் கூடம் அமைக்க 100 சதவீத மானியமாக ரூ.75 ஆயிரம் தரப்படும் என, தெரிவிக்கப்பட்டது.

**கொல்லிமலை பகுதியில் நெல் நடவுக்கு தயாராகும் விவசாயிகள்**

கொல்லிமலை: கொல்லிமலை விவசாயிகள் நெல் நடவுக்காக தங்களது நிலங்களை தயார் செய்து வருகின்றனர். நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் மேல்பூசணிகுழி, கீழ் பூசணிக்குழி, நரியங்காடு, ஊர்புரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு நெல் நடவு செய்கின்றனர். இப்பகுதியில் தண்ணீர் வசதி இருப்பதால், சமதளங்களில் விளைவது போல் நெல் விளைச்சல் உள்ளது. இந்நிலையில் கடந்த வாரங்களில் பெய்த மழையால், கொல்லிமலையில் பல பகுதிகளில் நெல் நடவு செய்ய, தங்களது நிலங்களை விவசாயிகள் தயார் செய்து வருகின்றனர். தற்போது வயல் அடிப்பதற்கு வசதியாக வயல்களில் தண்ணீர் தேக்கியுள்ளனர். பல இடங்களில் வயல் அடித்து நாற்று நடவும் தொடங்கிவிட்டனர். இதுகுறித்து செங்கரை விவசாயி குமார் கூறியதாவது: பெரும்பாலும், கொல்லிமலை விவசாயிகள், தங்களது வீட்டுத்தேவைக்குதான் நெல் பயிரிட்டுக்கொள்கின்றனர். பொன்னி, ஐஆர் 50 உள்ளிட்ட ரகங்கள் பயிரிடுகின்றனர். இந்த ஆண்டு தண்ணீர்

அதிகம் இருப்பதால், வழக்கத்தை விட அதிகளவு நெல் வயல அடித்துள்ளனர். இன்னும், 15 நாட்களில் நெல் நடவு பணிமுடிந்துவிடும். இவ்வாறு அவர் கூறினார்.

**ஆப்பிள், மாதுளை கிலோ ரூ.20 கூவிக்கூவி விற்பனை**

திருப்புவனம்: திருப்புவனத்தில் நேற்று ஆப்பிள், மாதுளம் பழம் கிலோ 20 ரூபாய்க்கு கூவி கூவி விற்பனை செய்ததால் ஏராளமான பொதுமக்கள் வாங்கிச் சென்றனர். மாதுளம் பழம் வயிற்று புண்ணிற்கு அருமருந்தாகும். மாதுளை ஜூஸ் குடித்து வந்தால் வயிற்று புண் தீர்க்கும் வல்லமை பெற்றது. தமிழகத்தில் குறைந்த அளவே மாதுளை பழங்கள்விளைகின்றன. மகாராஷ்டிரா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தான் அதிகளவு மாதுளம் பழம் வரத்துள்ளது. சிவப்பு, வெள்ளை என இருநிற முத்துக்கள் உள்ள மாதுளம்பழங்கள் அதிகளவில் விற்பனையாகின்றன. இதில் சிவப்பு முத்துக்கள் உள்ள பழங்கள் ருசியாக இருக்கும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். சமீப காலமாக ஆப்பிள் கிலோ 80 முதல் 100 ரூபாய் வரையும், மாதுளம் பழங்கள் கிலோ 60 முதல் 80 ரூபாய் என விற்பனை செய்யப்பட்ட நிலையில், நேற்று திருப்புவனத்தில் ஆப்பிள், மாதுளை பழங்கள் கிலோ 20க்கு விற்பனை செய்யப்பட்டது. மதுரை வியாபாரி சுரேஷ் கூறுகையில் ,"மகாராஷ்டிராவில் இருந்து சென்னைக்கு வந்த பழங்கள் இவை. சென்னையில் மழை,வெள்ளம் காரணமாக விற்பனையாகாததால் மதுரைக்கு கொண்டு வந்தனர். நாங்கள் வாங்கி வந்து விற்பனை செய்கிறோம், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண் பல்கலை சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருள்**

குறிஞ்சிப்பாடி: குறிஞ்சிப்பாடி அடுத்த கல்குணம் கிராமத்தில் தமிழக அரசு மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது. குறிஞ்சிப்பாடி பகுதியில் கடந்த ஒரு மாதமாக பெய்த கனமழையினால் நெல் உள்ளிட்ட விவசாய பயிர்கள் முற்றிலும் அழிந்து நாசமாகி விட்டது. இதனையடுத்து நேற்று கல்குணம் கிராமத்தில் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி, மாவட்ட ஆட்சியர் சுரேஷ்குமார் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 4000 கிலோ கோ 51 நெல்விதைகள், பத்தாயிரம் கத்தரி நாற்றுகள் மற்றும் நூறு பலா மரக்கன்றுகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தனி அலுவலர் கோவை பாஸ்கரன், கடலூர் வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோ, பேராசிரியர் அனீசாராணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருமானூரில் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப கருத்தரங்கு**

அரியலூர், : திருமானூரில் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப கருத்தரங்கு இன்று நடைபெற உள்ளது. இதுகுறித்து சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய மூத்த விஞ்ஞானி அழகுகண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை: மத்திய அரசின் திட்டத்தின்படி இந்த வாரம் வாழ்க விவசாயி, வாழ்க விஞ்ஞானம் என்று கொண்டாடப்படுகிறது. அதன்படி இன்று (23ம் தேதி) அரியலூர் மாவட்டம், சோழன்மாதேவி

கிராமத்தில் அமைந்துள்ள கிரீடு வேளாண் அறிவியல் மையம் மற்றும் ரிலையன்ஸ் அறக்கட்டளை இணைந்து திருமானூர் ஒன்றியம் பாக்கியநாதபுரம் தூய ஜெபஸ்தியார் ஆலயத்தில் உழவர்களுக்கு உதவும் உன்னத தொழில்நுட்பங்கள் பற்றிய கருத்தரங்கு நடக்க உள்ளது.இக்கருத்தரங்கு காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். இதில் வேளாண் விஞ்ஞானிகள், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளர்ப்பு அலுவலர்கள் கலந்துரையாட உள்ளனர்.

**நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது எப்படி? விவசாயிகளுக்கு பயிற்சி**

திருமயம், : புதுக்கோட்டை மாவட்டத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது குறித்து வேளாண் துறை சார்பில் பல்வேறு வட்டாரங்களில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, இதுதொடர்பான பண்ணைப் பள்ளி அரிமளம் வட்டாரம், நெடுங்குடி கிராமத்தில் நடைபெற்றது. இங்கு 3ம் வகுப்பு பாடமாக நெற் பயிரில் களை எடுத்தல், நீரை சிக்கனமாகப் பயன்படுத்துதல், குறைந்த அளவிலான நீரைக் கொண்டு அதிக விளைச்சல் பெருக்குவது என்பன உள்ளிட்ட ஒருங்கிணைந்த நெற்பயிரில் மேலாண்மை செய்வது மற்றும் அசோலா ஆகியன குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாகக் கூறப்பட்டதோடு மேலாண்மை குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் களை நிர்வாகம் குறித்து அரிமளம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் உதயகுமார் சிறப்புரையாற்றினார். களைகளின் வகைப்பாடு, அவற்றை கட்டுப்படுத்தும் உழவியல் முறை, இயந்திரவியல் முறை, ரசாயன முறைகள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். அத்துடன் களைக் கொல்லியின் வகைப்பாடுகள், களை வந்தபிறகும், வருவதற்கு முன்பும் பயன்படுத்தும் ரசாயனங்கள், களையை தேர்ந்தெடுத்து, களைக் கொல்லியை வகைபடுத்தி தெளித்து, கட்டுபடுத்தும் முறைகள், களைக் கொல்லி தெளிக்கும்போது கவனிக்க வேண்டியவை குறித்து விரிவாக

எடுத்துரைத்தார். இதையொட்டி, பல்வேறு களைக் கொல்லிகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும், நெல் வயலில் காணப்படும் பல்வேறு களைகள் மற்றும் அதன் குணங்கள் விவசாயிகளுக்கு ெசயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, வேளாண் அலுவலர் கருப்பையா நெற்பயிரில் நீர் மேலாண்மை பற்றி எடுத்துக்கூறினார். நெல்லுக்கு காய்ச்சலும் பாய்ச்சலுமாக இருந்து, அதன் கிளை வெடிக்கும் பருவத்திலும், பூக்கும் பருவத்திலும் நீர் மிக முக்கியம் என்பதையும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினார். கதிர் முற்றும் பருவத்தில் தண்ணீரின் தேவை குறைவு என்பதையும் விளக்கினார். இதனைத் தொடர்ந்து, அரிமளம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் முகமது ஷாஜஹான் அசோலா வானத்திலுள்ள தழைச்சத்தை எவ்வாறு கிரகித்து நெற் பயிருக்கு அளிக்கிறது என்பது பற்றி எடுத்துரைத்தார். மேலும் கால்நடை மற்றும் கோழி ஆகியவற்றிற்கு தீவனமாக அசோலா பயன்படுத்தும் முறை பற்றி தெளிவாக எடுத்துக் கூறினார். 106 நாட்களில் 48 கிலோ தழைச்சத்து வரை நெல்லுக்கு கிடைப்பதை விளக்கிக் கூறினார். அத்துடன் அசோலா வளர்க்கும் முறை குறித்து செயல் விளக்கம் அளித்தார். பின்னர், உதவித் தொழில்நுட்ப மேலாளர் விக்னேஷ் நெற்பயிரைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய் கண்டறியும் முறை பற்றியும் வளர்ந்த பூச்சிகள் ஒவ்வொறு பூச்சியிலும் எவ்வாறு இருக்கும் என்பதையும் விவசாயிகளுக்கு விளக்கினார். இதற்கான ஏற்பாடுகளை அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

**எள், நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி**

திருவையாறு, : திருவையாறு அருகே விளாங்குடியில் நடந்த எள் மற்றும் நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாமில் 40 விவசாயிகள் பயன்பெற்றனர். திருவையாறு வட்டார வேளாண்மைத்துறை சார்பில் அட்மா 2015 -2016 திட்டத்தின்கீழ் விளாங்குடி கிராமத்தில் எள் மற்றும் நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட

சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடைபெற்றது, 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்தார். ஓய்வுபெற்ற வேளாண்மை இணை இயக்குனர் கலியமூர்த்தி எள் மற்றும் நிலக்கடலையில் உழவியல் முறைகள், விதை நேர்த்தி, பயிர் பாதுகாப்பு முறைகள், அறுவடைக்கு பின் செய் நேர்த்தி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கிப் பேசினார். இதற்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் பாலமுருகன், சந்திரசேகரன் மற்றும் அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் மாதாலட்சுமி, உதவி வட்டார தொழில் நுட்ப மேலாளர்கள் பிறைசூடி, வெங்கடேசன் ஆகியோர் செய்தனர்.

**நெல்லை விட கேழ்வரகில் லாபம் அதிகம் விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுறுத்தல்**

ஆர்.எஸ்.மங்கலம், : நெல் பயிருக்கு இணையாக கேள்வரகு பயிரிட்டு கூடுதல் லாபம் சம்பாதிக்கலாம் என வேளாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.ராமநாதபுரம் மாவட்டத்தின் நெற்கழஞ்சியம் என அழைக்கப்படுவது திருவாடானை தாலுகாவாகும். இங்கு நெல் பயிர் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. சில சமயங்களில் சரியான மழை பெய்யாததால் விவசாயம் பொய்த்து விடுகின்றது. தற்போது ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் ஊரணங்குடி, கடலூர், சித்தூர்வாடி உள்ளிட்ட சில கிராமங்களில் கேழ்வரகு பயிரிட்டுள்ளனர். வறட்சியை தாங்கக்கூடிய கேழ்வரகு விவசாயம் செய்தால் வறட்சியான காலங்களில் கூட அதிக மகசூல் பெற்று லாபம் சம்பாதிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோ 9, கோ 13, கோ 14, ஜிபியு 28 உள்ளிட்ட ரகங்கள் கேழ்வரகில் உண்டு. இதில் கோ 9 ரகம் 100 முதல் 105 நாட்களில் அறுவடை செய்யலாம். கோ 13 ரகம் 95 லிருந்து 100 நாட்களும், கோ 14 ரகம் 105 லிருந்து 110 நாட்களும், ஜிபியு 28 ரகம் 110 லிருந்து 115 நாட்களிலும்

அறுவடை செய்யலாம். விதைக்கும்போது 0.5 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலில் ஊறவைத்து விதைத்தால் வறட்சியை தாங்கி வளரும். ஒரே சீராகவும் காணப்படும். 1 எக்டேருக்கு நேரடி விதைப்பாக இருந்தால் 10 முதல் 15 கிலோ தேவைப்படும். நாற்றுநடுவதாக இருந்தால் 5 கிலோ போதுமானது. இவ்வகை பயிரில் 1 எக்டேருக்கு 3 டன் கிடைக்கும். ஜிபியு 28 எக்டேருக்கு 3 அரை டன் கிடைக்கும். இது நெற்பயிரை விட அதிகலாபம் கொடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கேழ்வரகில் பூஞ்சை நேர்த்தி மிக முக்கியமாக செய்யப்பட வேண்டும். 1 கிலோ விதைக்கு 2 கிராம் கார்பென்டாக்சியம் அல்லது 4 கிராம் மேங்கோசெப் கலந்து விதைத்தால் வேர் அழுகாமல் நோயை கட்டுப்படுத்தலாம். பயிர்களிடையே 10 முதல் 15 செ.மீ இடைவெளி இருக்க வேண்டும். 35 நாட்களில் களை எடுத்து விடவேண்டும். மற்ற பயிர்களை விட பராமரிப்பு செலவு குறைவாகவே இருக்கும். உயிர் உரம் நேர்த்தி குறித்து அதிகாரிகள் கூறியதாவது: 1 எக்டேருக்கு அசோஸ் பைரில்லா மற்றும் பாஸ்போ பாக்டீரியா தலா 3 பாக்கெட்டை அரிசி கஞ்சியில் கலந்து 24 மணி நேரத்திற்குள் தெளிக்க வேண்டும். இது குறித்து ஆர்.எஸ்.மங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் மோகன்ராஜ் மற்றும் வேளாண்மை அலுவலர் உலகு சுந்தரம் கூறுகையில், நெல் பயிரிடுவதனால் கிடைக்கும் லாபத்ைதை விட கேழ்வரகு பயிரிட்டால் அதிகலாபம் பெறலாம். 100 கிராம் கேழ்வரகில் 7 கிராம் புரோட்டின் சத்தும், 1.3 கிராம் கொழுப்புசத்தும், 72 கிராம் மாவுசத்தும், 344 மி.கி. கால்சியம் சத்தும், 3.9 மி.கி. இரும்பு சத்தும், 0.42 மி.கி. டயமின் விட்டமின்சத்தும், 0.19 மி.கி. ரிக்கோமிடலின் சத்தும் உள்ளது. அரிசி, கோதுமையை விட கால்சியம் சத்தும், இரும்பு சத்தும் இதில் அதிகம் உள்ளது. சிறுதானிய பயிர்களை பயிரிட விவசாயிகள் முன் வர வேண்டும், என்றனர்.

**காளான் வளர்ப்பு குறித்து பயிற்சி**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் தமிழ்நாடு மகளிர் நலமேம்பாட்டு நிறுவன திட்ட அலுவலகத்தில் உள்ள பல்நோக்கு பயிற்சி,உற்பத்தி மையத்தில் காளான் வளர்ப்பு குறித்து பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.திட்ட இயக்குநர் ஜெயராமன் தலைமை வகித்தார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் தமிழ்வேந்தன் முன்னிலை வகித்தார். நேர்முக உதவியாளர் அம்பேத்குமார் வரவேற்றார். காளான் உற்பத்தி மைய கண்காணிப்பாளர் தனபாலன் காளான் வளர்க்கும் முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். பயிற்சியில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். காளான் வளர்த்தல், காளான் வளர்வதற்கு குடில் அமைத்தல், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பயனாளிக்கு இலவசமாக குடில் அமைத்து தருதல் உள்ளிட்ட பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. உதவி வேளாண் தொழில்நுட்ப மேலாளர் ஏகாம்பரம் நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**திருமூர்த்தி அணையில் இருந்து கோதவாடி, தேவம்பாடி வலசு குளங்களுக்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை முத்துகருப்பண்ணசாமி எம்.எல்.ஏ. தகவல்**



கிணத்துக்கடவு

திருமூர்த்தி அணையில் இருந்து கோதவாடி, தேவம்பாடி வலசு குளங்களுக்கு தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முத்துகருப்பண்ணசாமி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கோதவாடிகுளம்

கிணத்துக்கடவு அருகே கோதவாடி குளம் உள்ளது. 345 ஏக்கர் பரப்பளவில் அமைந்து உள்ள இந்த குளத்திற்கு கிணத்துக்கடவு கிழக்கு பகுதியில் உள்ள பணப்பட்டி, வடசித்தூர், பொண்ணாகாணி, அரசம்பாளையம் ஆகிய பகுதிகளில் மழை பெய்தால் இந்த குளத்திற்கு அதிகளவில் தண்ணீர் வரும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக போதியளவு பருவமழை பெய்யாததால் கோதவாடி குளம் தற்போது வறண்டு காணப்படுகிறது. மேலும், குளத்தை சுற்றிலும் முட்புதர்கள் சூழ்ந்து உள்ளது. கோதவாடி குளத்தில் தற்போது தண்ணீர் இல்லாததால் இங்கு உள்ள 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது. எனவே திருமூர்த்தி அணையில் இருந்து கோதவாடி குளத்திற்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எம்.எல்.ஏ.ஆய்வு

இதையடுத்து, முத்துகருப்பண்ணசாமி எம்.எல்.ஏ. கோதவாடி குளத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:- திருமூர்த்தி அணையில் ஆண்டுதோறும் பருவமழைக்காலங்களில் வெளியேறும் உபரிநீர் மற்றும் பாசனம¢ இல்லாத நேரத்தில் வரும் தண்ணீரை பி.ஏ.பி. வாய்க்கால் மூலம் கோதவாடி குளத்திற்கும், 85 ஏக்கர் பரப்பளவில் உள்ள தேவம்பாடி வலசு குளத்திற்கும் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுகுறித்து தமிழக முதல்- அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளது. இந்த பணிகள் நிறைவு பெற்றால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதி பெறுவதுடன், குடிநீர் பற்றாக்குறையும் நீங்கும். இவ்வாறு அவர் கூறினார். அப்போது ஒன்றிய குழு துணைத்தலைவர் ஏகநாத மூர்த்தி, மாவட்ட கவுன்சிலர் கவிதா

நடராஜ், ஊராட்சி தலைவர்கள் தேவராஜ், கோபால் ஆகியோர் உடன் இருந்தனர்.

**சேந்தமங்கலம் பகுதியில் மரவள்ளி கிழங்கு அறுவடை தீவிரம்**



சேந்தமங்கலம் பகுதியில் தற்போது சீசன் தொடங்கி உள்ளதை அடுத்து மரவள்ளி கிழங்கு அறுவடை தீவிரம் அடைந்து வருகிறது. இதற்கிடையில் விலை குறைவால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

மரவள்ளிகிழங்கு

சேந்தமங்கலம் அருகே உள்ள காளப்பநாயக்கன்பட்டி மற்றும் கொல்லிமலை அடிவார பகுதிகளான வாழவந்திக்கோம்பை, நடுக்கோம்பை போன்ற பகுதிகளில் சுமார் 1,000 ஏக்கருக்கு மேல் மரவள்ளி கிழங்கு பயிர் செய்யப்பட்டு வருகிறது. நன்றாக வேகக்கூடிய குங்குமரோஸ் ரகம், ஆலைகளுக்கு அனுப்பப்படும் முள்ளுவாடிகேட் ரகம்

ஆகிய 2 ரகங்களும் அங்கு பயிரிடப்பட்டு வருகிறது. இந்த ரகங்கள் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள புதன்சந்தை, செல்லப்பம்பட்டி, நாமகிரிப்பேட்டை போன்ற பகுதிகளுக்கும், வெளிமாநிலங்களான மராட்டியம், கொல்கத்தா போன்ற பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. வடமாநிலத்தவர்கள் மரவள்ளி கிழங்கு உணவு வகைகளை விரும்பி உண்டு வருகின்றனர்.

விலைகுறைவு

கடந்த ஆண்டு இந்த பகுதியில் ஒரு மூட்டை மரவள்ளிக்கிழங்கு ரூ.5 ஆயிரத்துக்கு விற்றது. இந்த ஆண்டு ரூ.3 ஆயிரத்தும் குறைவாக விற்று வருகிறது. இதனால் மரவள்ளி கிழங்கு விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். அத்துடன் மரவள்ளி கிழங்கு அரவை மில்களில் சுகாதாரமான முறையில் கிழங்கினை அரவை செய்ய வலியுறுத்தி வருகின்றனர். சுகாதாரமான முறையில் கிழங்கு அரவை செய்யப்படாததும் விலை குறைவுக்கு காரணம் என்று சில விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஐப்பசி மாதம் தொடங்கி மார்கழி மாதம் முடிய மரவள்ளி கிழங்கு அறுவடை சீசன் நடைபெறும். அதேபோல இந்த ஆண்டும் சேந்தமங்கலம் மற்றும் கொல்லிமலை அடிவார பகுதியில் மரவள்ளி கிழங்கு அறுவடை தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

## 1,900 டன் பொட்டாஷ் உரம் தஞ்சைக்கு வந்தது

சென்னையில் இருந்து சரக்குரெயிலில் 1,900 டன் பொட்டாஷ் உரம் தஞ்சைக்கு வந்தது. பொட்டாஷ் உரம் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர கோடை நெல் சாகுபடியும்

நடைபெறும். தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடி நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பா, தாளடி நெல் சாகுபடிக்கு தேவையான யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி. உரம், காம்ப்ளக்ஸ் உரம் ஆகியவை வெளிமாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி சம்பா, தாளடி நெல் சாகுபடிக்காக சென்னை துறைமுகத்தில் இருந்து பொட்டாஷ் உரமூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டு, தஞ்சைக்கு கொண்டு வரப்பட்டன. தஞ்சை ரெயில் நிலையத்திற்கு உர மூட்டைகள் ஏற்றப்பட்ட சரக்குரெயில் நேற்றுமுன்தினம் இரவு வந்து சேர்ந்தது. மொத்தம் 31 வேகன்களில் 1,900 டன் பொட்டாஷ் உர மூட்டைகள் வந்திருந்தன. பின்னர் இந்த உர மூட்டைகளை தொழிலாளர்கள் லாரிகளில் ஏற்றினர். இதையடுத்து உர மூட்டைகள் தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1,900 டன் உரத்தில் 500 டன் உரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், 1,400 டன் உரம் தனியார் விற்பனை நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன

**மடத்துக்குளம் அருகே நடுவில் குலை தள்ளிய அதிசய வாழை மரம்**



மடத்துக்குளத்தை அடுத்த வேடப்பட்டியில் பால் குளிரூட்டும் நிலையத்தில் 10–க்கும் மேற்பட்ட வாழை மரங்களை வைத்து வளர்த்து வருகின்றனர். இதில் ஒரு வாழை மரம் நடுவில் குலை தள்ளியுள்ளது. பொதுவாக வாழை மரங்கள் தண்டுப்பகுதியை விட்டு மேல்பகுதியில் இலைகளுக்கிடையே குலை தள்ளுவது வழக்கம். இந்த நிலையில் ஒரு வாழைமரத்தின் நடுவில் குலை தள்ளிய இந்த அதிசய வாழை மரத்தை பொதுமக்கள் அனைவரும் அதிசயமாக பார்த்துச்சென்றனர்.